30th January 1961] [Sri P. Kakkan]

The heavy rains and cyclonic weather affected other areas also in the District, more especially in Nanguneri taluk. Detailed reports about these are awaited.

Regarding breaches due to floods, the Government have issued instructions to the Chief Engineers (Highways and Rural Works and Irrigation) and other officers of the Department, that breaches in roads, tanks etc., and damages to culverts and bridges, should be repaired immediately and restored to normal use without any delay. Diversions to roads have been provided wherever necessary, till the repairs are completed.

It will, thus, be seen that the Government and the departmental officers have taken all steps that are necessary and are possible in rendering the necessary assistance during the time of the floods and cyclone and after.

MR. SPEAKER : The ruling I gave with regard to calling attention under Rule 41 will apply hereafter to all hon. Members and not only to the hon. Member, Sri M. S. Selvarajan.

SRI M. KALYANASUNDARAM : கனம் அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து. . . .

MR. SPEAKER : இந்த விதியின்படி எப்படி பேசமுடியும்? விதி எல்லோருக்கும் ஒன்றுதான். எனக்குமேல் உங்களுக்கு அனுபவம் இருக்கிறதே! ஆகவே அமைச்சர் கூறியவற்றிற்கு மேல் ஒன்றும் கேட்கவே முடியாது.

VI—PRESENTATION OF THE REPORT OF THE SELECT COMMITTEE ON THE MADRAS STATE HOUSING BOARD BILL, 1960 (L.A. BILL No. 31 OF 1960).

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I present the Report of the Select Committee on the Madras State Housing Board Bill, 1960 (L.A. Bill No. 31 of 1960).

VII—GOVERNMENT BILL.

THE MADRAS APPROPRIATION BILL, 1961 (L.A. BILL NO. 6 OF 1961).

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move "that the Madras Appropriation Bill, 1961 (L.A. Bill No. 6 of 1961) be taken into consideration."

MR. SPEAKER : The question is—

'That the Madras Appropriation Bill, 1961 (L.A. Bill No 6 of 1961) be taken into consideration.'

The motion was put and carried.

SRI M. KALYANASUNDARAM : Sir, I want to speak on the motion.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the hon. Member may speak at the third reading stage.

MR. SPEAKER : I have already put the motion to the vote of the House and the motion has been carried. Anyhow, the hon. Member may speak at the time of the third reading.

Clauses 1 and 2 were put and carried.

Preamble.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move the following amendment :—

'In the Preamble, *for* the words "Eleventh Year", *substitute* the words "Twelfth Year".

MR. SPEAKER : The question is—

'In the Preamble, *for* the words "Eleventh Year", *substitute* the words "Twelfth Year".

The amendment was put and carried.

The Preamble, as amended, was put and carried.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move that the Madras Appropriation Bill, 1961 (L.A. Bill No. 6 of 1961), as amended, be passed.

MR. SPEAKER : Motion moved—

'That the Madras Appropriation Bill, 1961 (L.A. Bill No. 6 of 1961), as amended, be passed.'

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் மூலம் அதிகமாக ஏற்படக்கூடிய செலவுக்கு 6 கோடி ரூபாய்க்கு அதிகமாக உபமான்யத்தில் கேட்டிருக்கிறார்கள். அதை இந்தச் சபை அனுமதித்து இருக்கிறது. அதிலே அரசாங்கம் கவனிக்கவேண்டிய சில விஷயங்களை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். முதலாவதாக பஞ்சாயத்து அமைப்புகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற அதிகத் தொகையைப்பற்றி நான் பொது விவாதத்தின்போது சில விஷயங்களை எடுத்துக் காட்டியிருக்கிறேன். ஏற்படக்கூடிய காலதாமதத்தைப்பற்றியும் புதிதாகத் தோன்றிய பஞ்சாயத்துக்கள் இயங்க முடியாமல் இருப்பது பற்றியும் குறிப்பிட்டிருக்கிறேன். புதிதாகத் தோன்றிய பஞ்சாயத்துத் தலைவர்களை அழைத்து வந்து சுற்றுப் பிரயாணம் செய்து, நகரங்களில் பல அபிவிருத்தித் திட்டங்களைக் காட்டுகிறார்கள். அதைப்பற்றி ஆட்சேபணை இல்லை. வரவேற்கிறேன். அந்த அனுபவத்தை வைத்துக்கொண்டு ஊருக்குப் போனால்—காகிதம் கிடையாது, பணமும் கிடையாது. புதிதாகத் தோன்றிய பஞ்சாயத்துக்களுக்குக் குறைந்தது 100 ரூபாயாவது அரசாங்கம் ஒதுக்கினால் பின்னால் சர்க்கார் கொடுக்கக்கூடிய மானியத்திலே ஈடு செய்து கொண்டாலும் கொள்ளலாம்.

30th January 1961] [Sri M. Kalyanasundaram]

இல்லாவிட்டாலும்கூட ஆரம்ப செலவிற்காக, நாம் ஒரு மான்யமாகக் கொடுத்த தொகையாக அதைக் கருதி அவர்கள் ஆரம்ப வேலைகள் தொடங்க உதவியாக இருக்கவேண்டும். அப்படி பண உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு "ஹோ அண்ட் கோ"-க்கு தந்திக்கு மேல் தந்தி போய் கொண்டிருக்கிறது. இன்னும் தேவையான பாரங்கள், புத்தகங்கள், ரசீது புத்தகங்கள் இவையெல்லாம் பஞ்சாயத்துகளுக்கு அனுப்பவில்லை என்பதை நான் கனம் அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இல்லாவிடில், விசேஷ நடவடிக்கைகள் எடுத்து ஒவ்வொரு ஜில்லாவிலும் கலெக்டர்கள் கையில் அதிகாரத்தைக் கொடுத்து தேவையான புத்தகங்கள், பாரங்கள் இவைகளை அந்த அந்த ஜில்லாக்களிலேயே அச்சடித்து உடனடியாகக் கொடுக்க ஏற்பாடு செய்தால் இந்த பஞ்சாயத்துகள் உடனடியாக இயங்க முடியும். ஹோ அண்ட் கோ-க்கு இதையெல்லாம் பூர்த்தி செய்யமுடியுமா என்ற சந்தேகம் எனக்கிருக்கிறது. ஆகவே, ஆரம்ப நடவடிக்கையாக இவற்றை சப்ளை செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக, கிராம கர்ணங்களை பஞ்சாயத்து காரியதரிசியாக நியமிப்பது என்பதுபற்றி. பஞ்சாயத்து காரியதரிசி என்ற புதிய பதவியை உத்தரவு மூலம் சிருஷ்டித்திருக்கிறார்கள். பஞ்சாயத்து காரியதரிசி என்ற பதவி நியமிப்பதற்கு இந்தச் சட்டத்தில் அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறதா? கமிஷனரை நியமிக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. இம்மாதிரி பதவிகளை தயார் செய்ய சட்டத்தில் இடமிருக்கிறது. ஆனால் பஞ்சாயத்துக்களில் பஞ்சாயத்து காரியதரிசி என்ற பதவியை ஏற்படுத்தி, கிராம கர்ணங்களை பஞ்சாயத்து காரியதரிசிகள் என்று அந்தஸ்தோடுள்ள ஒரு பொறுப்பையும் கொடுத்தால் பஞ்சாயத்துக்கள் கிராமக் கர்ணங்கள் கையில் மாறி விடுமே, தவிர பஞ்சாயத்துக்கள் சுதந்திரமாக இயங்கக் கூடிய ஒரு நிலை இருக்காது. ஆரம்பத்தில் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அந்தந்த பஞ்சாயத்துக்கள் விருப்பப்படி செய்யலாம், அவர்கள் விரும்பினால் செய்யலாம், இல்லாவிடில் இல்லை. என்று. அமைச்சர் அவர்களின் எண்ணம் அதுவாகயிருக்கலாம். திருச்சி ஜில்லாவிற்கு சென்றிருந்தேன் நான். 26-ம் தேதி அங்கிருந்தேன். அங்குள்ள தலைவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், கட்சி வித்தியாசம் இல்லாமல், கலெக்டர் பஞ்சாயத்து மகாநாடுகள் கூட்டி கணக்குப்பிள்ளைகள் கட்டாயமாக காரியதரிசிகளாக நியமிக்கப்படவேண்டும், அப்படியானால் மேற்கொண்டு சலுகைகள் கொடுக்க முடியும், அப்படிச் செய்தால்தான் திட்ட வேலைகளுக்கு உதவி செய்ய முடியும், அப்படி கணக்குப்பிள்ளைகளை காரியதரிசியாக ஏற்றுக்கொள்ளாத பஞ்சாயத்துக்கள் புறக்கணிக்கப்படும் என்பதாக அவர்கள் என்னிடம் முறையிட்டார்கள். இதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன், சர்க்கார் உத்தரவு மூலம் செக்ரட்டரி என்ற பதவியை சிருஷ்டித்திருக்கிறார்கள். எந்த அதிகாரத்தை உபயோகித்து

[Sri M. Kalyanasundaram] [30th January 1961]

இதைச் செய்கிருர்கள்? கணக்குப்பிள்ளை, மணியக்காரர் இவர்களுக்கு அதிக சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கலாம். பத்து ரூபாய் அதிகம் கொடுக்கயிருக்கிருர்கள். பல அபிவிருத்தி வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. திடீரென்று, மத்திய அரசாங்க அதிகாரிகள், ராஜ்ய சர்க்கார் அமைச்சர்கள், அவர்கள் மட்டுமன்றி மற்ற அதிகாரிகளும் வந்து பல விவரங்கள் கேட்கிருர்கள். கணக்குப்பிள்ளை, மணியக்காரர் இவர்கள், அவர்களுக்கு வேண்டிய விவரங்களைக் கொடுத்து அவர்களை திருப்தி செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களது வேலையும் அதிகரித்திருக்கிறது. அவர்களுக்கு ஏற்கெனவே கொடுத்து வந்திருக்கும் சம்பளத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதையும் ஒப்புக்கொள்கிறேன். அதற்காக கொடுக்கட்டும். ஆனல் கணக்குப்பிள்ளைகளை காரியதரிசிகளாக நியமிக்க வேண்டுமென்று சொல்வது தவறு. அப்படிச் செய்வது, பஞ்சாயத்துகள் சுதந்திரமாக இயங்குவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் என்பதை நான் கனம் அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரம், தாங்கள் வசிக்கும் பகுதியிலிருந்து ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தேர்ந்தெடுக்கும் உறுப்பினர்கள் தலைவரை தேர்ந்தெடுப்பார்கள், அவர்கள் பஞ்சாயத்து யூனியன் சேர்மனை தேர்ந்தெடுப்பார்கள். ஆக, பஞ்சாயத்தின் பெயரில் மக்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரம் வெகு சொற்பம். அப்படியிருக்க அந்த அதிகாரத்தையும் எடுத்துவிடக் கூடாது கணக்குப் பிள்ளைகளை காரியதரிசிகளாக நியமிப்பதின் மூலம். பர்ஸ்ட் க்ளாஸ் பஞ்சாயத்துக்களில் அதிகாரிகளின் குறுக்கீடு இருக்கிறது என்பதை நாம் அனுபவத்தில் பார்க்கிறோம். நகராசபைகளில் கமிஷனரின் குறுக்கீடு இருந்து நகரசபைகள் சுதந்திரமாக இயங்க முடியாத நிலையில் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டியிருக்கிறோம். இது ஒரு கட்சிப் பிரச்னை அல்ல. ஆகவே கணக்கர்களை பஞ்சாயத்து காரியதரிசிகளாக நியமிக்கும் கொள்கை அறவே கை விடப்பட வேண்டுமென்று கூற விரும்புகிறேன். அடுத்தபடியாக, "அனிமல் ஹஸ்பன்ட்ரி". 202,000 ரூபாய் அதிகமாக கோரியிருக்கிருர்கள், 1,000 முரா ஜாதி எருமைக் கிடாக் கன்றுகள் வாங்குவதற்காக. வாங்கும் தீர்மானத்தை ஆட்சேபிக்கவில்லை. நல்ல திட்டம்தான். நம் ராஜ்யத்தில் பால் அபிவிருத்திக்காக எடுக்கும் திட்டம் என்பதற்காக வரவேற்கிறேன். ஆனல் கன்றுகள் வாங்கும் முறைபற்றி சில புகார்கள் எனக்கு வந்திருக்கின்றன. கீழ்பாக்கத்தில் . . . .

MR. SPEAKER : The hon. Member cannot talk about policies and details during the Third Reading stage. He should have spoken about these things when the clauses were considered. He has missed the bus. He should have referred to all these things during the second reading stage? If he has not done that, what can the Chair do in the matter?

SRI M. KALYANASUNDARAM : I am sorry, Sir. Even in the first instance, I stood up. But unfortunately, the Speaker did not notice me, or rather, I did not catch his eye.

MR. SPEAKER : I wish only to point out that it is quite inappropriate to refer to all these matters during the Third Reading stage.

SRI M. KALYANASUNDARAM : I crave your indulgence, Sir. for a few minutes.

MR SPEAKER : The hon. Member should be brief.

SRI M. KALYANASUNDARAM : பாலிஸியைப் பற்றித்தான் பேசுகிறேன் கன்றுகள் வாங்கும் திட்டத்தைப்பற்றி சொல்லவில்லை. வாங்கும் கொள்கையில், முறையில் சில புகார்கள் இருக்கின்றன, விலை அதிகமாக இருப்பதாக. ஒரு கன்றுக்கு 220 ரூபாய் என்று சொன்னால் அது அதிக விலை என்று நான் நினைக்கவில்லை. ஒரு கிடாக் கன்றுக்கு அவ்வளவு கொடுக்கலாம். ஆனால் அந்த விலைக்கு தகுந்ததாகயிருக்கவேண்டும். அப்படி விலைக்கு தகுந்ததாகயில்லை, ஏமாற்றப்படுகிறது என்ற புகார்கள் எனக்கு வந்திருக்கிறது. அதை விவசாய அமைச்சர் அவர்களுக்கு அனுப்பியிருப்பதாக எனக்கு ஞாபகம். ஆகவே அதை பரிசீலனை செய்து, பணம் பட்டுவாடா செய்வதற்கு முன் அதை விசாரிக்க வேண்டும், வாங்கும் முறையில் என்ன கோளாறு இருக்கிறதென்று, ஏன் இவை கண்ட்ராக்டர்கள் மூலம் வாங்கப் படவேண்டும்? அடுத்தபடியாக, ஜமீன்தார்களுக்கு நஷ்டஈடு கொடுக்கும் விஷயமாக திறமையாக வேலை நடந்திருக்கிறது. சர்வே செட்டில்மென்ட் முடிந்திருக்கிறது. எதிர்பார்த்ததற்கு மேல் இவ்வாண்டு கொடுக்கப்பட்டிருக்கிறது அதை வரவேற்கிறேன். வரவேற்பது ஜமீன்தார்களுக்கு நஷ்டயீடு வருவதால் அல்ல. நமது சர்வேயர்கள் தாற்காலிகமாக நியமிக்கப்பட்டு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். பத்து வருடத்திற்கு மேல் சர்வீஸ் ஆனவர்கள்கூட இருக்கிறார்கள், என்பது தெரிந்த விஷயம். அவர்களின் சம்பள விகிதத்திலும் வித்தியாசம் இருக்கிறது. பர்மெனன்ட்டாக இருப்பவர்களுக்கு கொடுக்கப்படும் சம்பளம் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அவர்களின் எதிர்காலம் என்ன என்பதுபற்றி அவர்களுக்கு கவலை ஏற்பட்டிருக்கிறது. பூர்த்தியடையக் கூடிய பாசனத் திட்டங்களில் உள்ள தாற்காலிக சிப்பந்திகளின் நிலையும் இப்படித்தான் இருக்கிறது. ஆகவே, இவர்களுக்கெல்லாம் எந்த விதமான பிரச்னையும் ஏற்படாமல் அதற்கு உடனடியாக உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

SRI S. LAZAR : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் பேசுகிறபோது ஒன்றிரண்டு குறிப்புகள் கொடுத்ததின் காரணமாக அதற்கு பதில் சொல்லக்கூடிய முறையில் இப்பொழுது நான் எழுந்து நிற்கிறேன். அவர்கள்

பேசும்போது, பஞ்சாயத்துகளுக்கு காரியதரிசியாக கர்ணங்கள் கட்டாயமாக எடுத்துக் கொள்ளப்படவேண்டுமென்று கலெக்டரோ அல்லது அவர்களுக்குக் கீழ் இருக்கும் அதிகாரிகளோ கட்டாயப் படுத்துகிறார்கள். ஒவ்வொரு கூட்டத்திலும் என்று அவர்களுக்கு தகவல் வந்ததாக சொன்னார்கள். ஒவ்வொரு கூட்டத்திலும் கலந்து கொண்டவன் என்ற முறையிலே அது சரியான தகவல் அல்ல என்று நான் கூற விரும்புகிறேன். ஒவ்வொரு கூட்டத்திலும் இது விளக்கமாக எடுத்துச் சொல்லப்பட்டது. அந்தக் கூட்டங்களிலே நான் இருந்து பேசக் கூடிய வாய்ப்பும் இருந்தது. ஒரு சில அங்கத்தினர்கள், அது சரியாக நடைமுறையில் வராது என்று சொன்னார்கள், அது உண்மை. அவர்களுக்கு இதுபற்றி விளக்கமாக எடுத்துச் சொல்லப்பட்டது, இது நடைமுறையில் எப்படியிருக்கிறது என்று பரீட்சார்த்தமாக பார்க்கயிருக்கிறது அரசாங்கம் என்று. கட்டாயப்படுத்த வேண்டுமென்ற நோக்கம் இருந்திருந்தால் விதிகளிலே அதை அமைத்திருக்க முடியும் என்று எடுத்துச்சொல்லப்பட்டது. ஆங்காங்குள்ள நிலைமையை அனுசரித்து அந்தந்த பஞ்சாயத்துக்கள் இஷ்டப்பட்டால் எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டதை நான் அவர்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். ஒவ்வொரு மகா நாட்டிலும் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்பதை நான் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். அடுத்தபடியாக, பஞ்சாயத்து காரியதரிசியாக கர்ணம் நியமிக்கப்பட வேண்டுமென்று சொல்லும்போது அதற்கு சட்டத்தில் இடம் கொடுக்கப்படவில்லை என்று சொல்வது சரியல்ல. சட்டத்தில் இடம் கொடுக்கப்படவில்லையென்றால் விதிகளில்தான் இதை அமைக்க வேண்டுமே தவிர சட்டத்திலல்ல. பஞ்சாயத்துக்களுக்கு அந்த உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது என்ற முறையில் பார்க்கும்போது, அது நடைமுறையில் எப்படியிருக்கும் என்பது பார்க்கப் பார்க்கத்தான் தெரியும். ஆக, கனம் கல்யாண சுந்தரம் அவர்கள் கொடுத்த தகவல் சரியான தகவல் அல்ல என்ற கருத்தை மட்டும் சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

10-00 a.m. SRI A. GOVINDASAMY : கனம் சபாநாயகர் அவர்களே, இதில் நாங்கள் எவ்வளவுதான் எதிர்த்தாலும் கனம் அமைச்சர் அவர்கள் கோரியிருக்கும் இந்தத் தொகையை எடுத்துக்கொள்ளத்தான் போகிறார்கள். குறிப்பிட்ட இனத்திற்கு செலவு செய்யத்தான் போகிறார். இருந்தாலும் இந்த தலைப்பின் கீழ் என்னென்ன வழி முறைகளை கைகொள்ளவேண்டும் என்பதைப்பற்றி திரு கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். அந்த அடிப்படையிலேயே நானும் சில விஷயங்களை குறிப்பிட விரும்புகிறேன். இந்த பஞ்சாயத்து சட்டத்தை நிறைவேற்றுகின்றபொழுது, அவசர அவசரமாக இதை நிறைவேற்றியதால் இப்போது பல தவறுதல்கள் நடைபெறுகின்றன. அதை நான் சுட்டிக்காட்டி அதற்கு பரிகாரம் தேட வேண்டும் என்கின்ற முறையில் சில விஷயங்களை,

30th January 1961] [Sri A. Govindasamy]

குறிப்பிட விரும்புகிறேன். நாங்கள் சொல்லுகின்ற கருத்து சரியானது என்று தோன்றினால் அதன்படி சர்க்கார் தங்கள் கொள்கைகளை திருத்திக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறார்கள். அதன்படி செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய மாவட்டத்தில் சிதம்பரம் வட்டத்தில் இடையாறு என்கிற கிராமத்தில் பஞ்சாயத் போர்டு தலைவர் தேர்தல் நடந்தது. அதில் ஏழு உறுப்பினர்கள் இருந்தார்கள். அதில் ஐந்து ஆறு பேர் வோட்டு போட வேண்டியிருந்தது. தேர்தல் நடத்த வந்த அதிகாரி ஆறு சீட்டுகளில் கையெழுத்துப்போட்டு கொடுத்தார்கள். பின்னால் அதை எண்ணுகின்றபொழுது ஒருவருக்கு 4 சீட்டுகளும் வேறொருவனுக்கு இரண்டு சீட்டுகளும் கிடைத்தன. இருந்தும் முடிவை உடனேயே தெரிவிக்காமல் வந்துவிட்டார்கள் அந்த அதிகாரிகள். இந்த சாதாரணமான விஷயம்கூட சர்க்காரின் கவனத்திற்கு வந்தது. இம்மாதிரி முடிவை உடனே தெரிவிக்காததின் காரணமாக பல தவறான எண்ணங்களை பரப்புவதற்கு ஏதுவாக இருக்கிறது. பின்னால் சர்க்கார் இந்த முடிவை தெரிவித்தார்கள். இந்த மாதிரியான சம்பவங்களை பார்த்தாவது எதிர்காலத்தில் தடுத்து நிறுத்த சர்க்கார் கடமைப்பட்டிருக்கிறார்கள். மேலும் வடார்காடு மாவட்டத்தில் போளூர் பஞ்சாயத்து யூனியனில் தலைவர் கூட்டத்தை ஒத்தி வைக்கிறேன் என்று சொல்லிவிட்டு போன பிறகும்கூட பின்னால் அங்கேயிருந்த அங்கத்தினர்கள் அவர்களோடு இருந்த உப தலைவரைக்கூட பொருட்படுத்தாமல் வேறு ஒரு உறுப்பினரை தலைமை வகிப்பதற்கு என்று தேர்ந்தெடுத்து கூட்டத்தை பின்னால் நடத்தியிருக்கிறார்கள். இதைத் தடுத்து நிறுத்த எந்த அதிகாரிக்கும் தைரியம் இல்லை. இம்மாதிரி நடத்தக் கூடியவர்களுக்கு இன்னும் இது போன்ற பாதுகாப்பு கொடுத்துக் கொண்டிருக்க வேண்டுமா ? இம்மாதிரியான தவறுகள் பல பஞ்சாயத்து யூனியன்களிலும் நடந்து கொண்டிருக்கின்றன. என்னுடைய கவனத்திற்கு வந்த ஒன்றிரண்டாகத்தான் இப்போது சொன்னேன். இதையெல்லாம் பார்த்து பஞ்சாயத்து யூனியன் நல்ல முறையில் இயங்க வேண்டுமென்றால், அதிகாரிகளும் பஞ்சாயத் தலைவர்களும் ஒற்றுமையாக செயலாற்ற வேண்டும். இல்லையென்றால் நல்ல முறையில் பஞ்சாயத்துகள் நடைபெறாது. அது மட்டுமல்ல நாம் எதிர்பார்க்கின்ற பல வெற்றிகளுக்கு இடையூறாக அமையும். அதோடு திரு கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னது போன்று பல இடங்களிலும் இன்னும் பாரங்கள் வரவில்லை. பஞ்சாயத் தலைவர் தேர்தல்கள் எல்லாம் முடிவடைந்து இருக்கின்றன. இவற்றிற்கான கிளார்க்குகள், பில் கலெக்டர்கள் எல்லாம்கூட போட்டுவிட்டார்கள். மேலும் கணக்குப்பிள்ளைகளை ஒவ்வொரு கிராம பஞ்சாயத்துக்கும் காரியதரிசியாக போடவேண்டும் என்ற எண்ணமிருப்பதாக தெரிகிறது. இவ்விதம் போட்டால் ஜனநாயக முறையில் இயங்கக் கூடிய பஞ்சாயத்துகள் சர்க்காருடைய ஊழியர்கள் என்ற முறையில் இருக்கக்கூடிய அதிகாரிகள் பஞ்சாயத்து நிர்வாகத்தில் குறுக்கிட நேரிடும் என்ற காரணத்தால், இந்த

முறையே ஆட்சேபிக்கின்றோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களுடைய ஊதியத்தை உயர்த்துவதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அவர்களுக்கு இப்போதே அரசாங்கம் எவ்வளவோ வேலைகளை கொடுத்திருக்கிறது. ஏற்கெனவே அவர்களுக்கு இருக்கின்ற வேலைகளோடு இதுவும் சேர்த்துக்கொடுத்தால் அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும், அதோடு திறமையாகவும் வேலைகள் நடைபெறுது. ஆகவே இதற்கும் நல்ல முறையில் வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **Sri V. K. RAMASWAMY MUDALIYAR** : கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது ஜில்லா போர்டுக்கு கொடுத்துவரும் மான்யம் தக்க சமயத்தில் கொடுப்பதில்லை. இதன் காரணமாக ஏராளமான சாலைகள் எல்லாம் பழுது பார்க்கப்படாமல் இருந்து வருகின்றன. முக்கியமாக எங்கள் மாவட்டத்தில் கழிந்த மழையின் காரணமாக ரோடுகள் எல்லாம் சேதமடைந்து கிடந்தன. அவற்றை எல்லாம் பழுது பார்ப்பதற்காக சுமார் 3½ லட்சம் ரூபாய் வேண்டும் என்று எஸ்டிமேட் போட்டு அனுப்பினர்கள். நாளது வரையிலும் அது சாங்க்ஷன் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. மெயின்டனன்ஸ் பணத்திலிருந்து வேலை செய்ய வேண்டியதாக இருக்கிறது. இதன் காரணமாக எல்லா இடங்களிலும் வேலை செய்ய முடியவில்லை. செய்த வேலைகளுக்கு எல்லாம் கான்டிராக்டர்களால் சரியான முறையில் பணம் வாங்க முடியவில்லை. இதைப்பற்றி நிதி அமைச்சர் அவர்களுக்கு எழுதியிருந்தேன். அதற்கு வழக்கப்படி டெப்யூடி செக்ரட்டரியிடமிருந்து "கவனிக்கப்படும்" என்ற பதில் வந்தது. போதுமான நிதி ஒதுக்கப்படாததின் காரணமாக இவ்விதமான பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன, ஜில்லா போர்டு தலைவர்களாக கலெக்டர்களை போட்டுவிட்டு அவர்களை எல்லாம் நான்-அபிஷியலாக நடத்தக் கூடாது என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது பொது விவாதம் போல் நடந்திருக்கிறது. சில குறிப்பிட்ட விஷயங்களுக்கு மட்டும் நான் பதில் சொல்ல விரும்புகிறேன். பஞ்சாயத்துக்களுக்கு அட்வான்ஸ் தொகை கொடுக்க வேண்டுமென்றுள்ள கருத்தை திரு கல்யாணசுந்தரம் அவர்கள் தெரிவித்தார்கள். இதில், வருஷ மத்தியில் பஞ்சாயத்துக்களும் பஞ்சாயத் யூனியன்களும் ஆரம்பமானதால் சில சிக்கல்கள் வந்தன. அடுத்த மாதத்தில் இந்த சிக்கல் இராது என்று நம்புகிறேன். வருஷ ஆரம்பத்தில் இம்மாதிரியான நடவடிக்கை எடுக்க மிகவும் வசதியாக இருக்கும் என்று நம்புகிறேன். ஆகவே இனி சிக்கல்கள் ஒன்றும் ஏற்படாது என்று நம்புகிறேன். அடுத்ததாக பாரங்கள் பிரிண்டாகவில்லை என்பதைப்பற்றி சொன்னார்கள். பாரங்கள் எல்லாம் பிரிண்டாகி எல்லா இடங்களுக்கும் வழங்கப்

TRUTH ALONE TRIUMPHS

30th January 1961] [Sri C. Subramaniam]

பட்டு வருகிறது என்ற தகவல் எனக்கு கிடைத்திருக்கிறது. கர்ணங்களை செக்ரட்டரியாக நியமிப்பதுபற்றி அவர்கள் நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். அதிலும் திருச்சியில் அவ்விதம் இருப்பதாகச் சொன்னார்கள், ஆகவே அந்தக் கூட்டங்களில் எல்லாம் கலந்து கொண்ட திரு வாசர் அவர்கள் அதற்குப் பதிலும் சொன்னார்கள். எந்த பஞ்சாயத்து விரும்புகின்றதோ அந்த பஞ்சாயத்துக்களில் மட்டும் கர்ணங்களை செக்ரட்டரியாக வைத்துக்கொள்ளலாம் என்பதுதான் சர்க்காருடைய கொள்கை. இதில் எந்தவிதமான கட்டாயமும் கிடையாது.

அதற்கடுத்தபடியாக, திரு. கோவிந்தசாமி அவர்கள் பஞ்சாயத்து சட்டத்தைப்பற்றி சொன்ன போது இது அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டது என்று சொன்னார்கள். அவர்கள் எந்த அடிப்படையில் சொன்னார்கள் என்பது தெரியவில்லை. இதற்கு தனியாக ஒரு வொயிட் பேப்பர் தயார் செய்து, அதை எல்லாக் கட்சித் தலைவர்களும் பரிசீலனை செய்து விவாதித்து, பின்னால் அதன் அடிப்படையில் மசோதா தயார் செய்து, அந்த மசோதா மீதும் பரிசீலனை செய்து விவாதித்துத்தான் நிறைவேற்றப்பட்டது. இப்படியிருக்கும்போது இது அவசர அவசரமாக நிறைவேற்றப்பட்டது என்று எந்த அடிப்படையில் சொல்லுகிறார்கள் என்று தெரியவில்லை. அதோடு ஒன்றிரண்டு பஞ்சாயத்துக்களில் நடந்த தவறான நிகழ்ச்சிகளைப்பற்றி குறிப்பிட்டார்கள். ஆயிரக்கணக்கான பஞ்சாயத்துக்கள் நடக்கும்போது இந்த மாதிரி ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளை வைத்துக்கொண்டு எல்லா இடங்களிலுமே இந்த மாதிரியான தவறுகள்தான் நடைபெறுகின்றன என்று நாம் நினைக்கக்கூடாது. இதே சமயத்தில் எல்லா இடங்களிலும் விதிக்குட்பட்டுதான் பஞ்சாயத்துக்கள் நடந்து கொண்டிருக்கின்றன என்று சொல்வதற்கு நான் தயாராக இல்லை. ஆங்காங்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் சில குறைகள் தவறுகள் ஏற்படலாம். அதை பெரிதாக்கி எல்லா பஞ்சாயத்துக்களும் இப்படித்தான் நடக்கின்றன என்கின்ற அபிப்பிராயத்தை பரவ விடாமல், ஆங்காங்கு ஏற்படுகின்ற தவறுதல்களை நீக்குவதற்கு எல்லோரும் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக எருமைக் கன்றுகள் வாங்குவதைப்பற்றி திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதைப்பற்றி விவசாய அமைச்சர் அவர்களுக்கும் எழுதியிருப்பதாக தெரிவித்தார்கள். இதிலுள்ள நுணுக்கம் என்னவென்று எனக்கு இப்போது தெரியவில்லை. விவசாய அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

ஜில்லா போர்டுகளுக்கு மான்யங்கள் கொடுக்கப்படுவதைப் பற்றி கனம் ராமசாமி முதலியார் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த விஷயம் இந்த மசோதாவில் இல்லையாகையால் அது பற்றிய

விவரங்கள் இப்போது என்னிடத்தில் இல்லை. முக்கியமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கெல்லாம் போதிய அளவு பணம் செலவு செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது தான் என்னுடைய எண்ணம். அதில் ஏதாவது தாமதம் இருந்தால் கூடிய சீக்கிரமே கொடுக்கப்படும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க வேண்டியதில்லை.

அதே போன்றுதான் ஜமீன்தாரி செட்டில்மென்ட் பற்றி குறிப்பிட்டார்கள். இதில் தகுதியுள்ள பயிற்சியுள்ள அதிகாரிகளுக்கு வேலை கொடுக்கவேண்டும் என்பதைப் பற்றி சொன்னார்கள். இவர்களை தகுதியுள்ள வேலைகளுக்கு அவர்களுடைய தகுதிக்கு தகுந்தவாறு பயிற்சிக்கு தகுந்தவாறு எடுத்துக்கொள்வதற்கு முயற்சிக்கப்படும் என்ற உறுதியை மட்டும் என்னால் இப்போது சொல்லிக்கொள்ள முடியும். அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்பதற்காக வேலையில்லாத இடத்தில் கூடுதலாக கொண்டு போய் அமர்த்த வேண்டும் என்று சொல்வது தவறு என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : இந்த விஷயத்தை ஒட்டுக்கு விடும் முன்பு மூன்றாவது ரீடிங் போது என்ன பேச முடியும் என்று சபைக்கு எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

The Speaker of the Lok Sabha has made the following observations :—

"In the third reading no speeches are allowed ordinarily, of course, except in extraordinary cases, and the case that members do not come in time cannot be treated as an extraordinary case. The position is that at the third reading the discussion is restricted only to such amendments or changes that have been made during the clause-by-clause reading stage. That is the general rule".

In fact, we have not made any changes in the Bill during the clause-by-clause consideration. That is why I said that all those points referred to by hon. Member Sri Kalyanasundaram during the Third Reading stage were quite inappropriate.

THE HON. SRI C. SUBRAMANIAM : We have changed 'Eleventh Year' into 'Twelfth Year' in the Preamble and probably that might be considered as an amendment.

MR. SPEAKER : The question is :

"That the Madras Appropriation Bill, 1961 (L.A. Bill No. 6 of 1961), as amended, be passed."

The motion was put and carried and the Bill, as amended, was passed.

VIII.—NON-OFFICIAL BUSINESS.

A. Bills.

(1) THE MADRAS INDUSTRIAL ESTABLISHMENTS (REGULATION OF TERMINATION OF EMPLOYMENT) BILL, 1960 (L.A. BILL NO. 28 OF 1960).

SRI M. KALYANASUNDARAM : Sir, to-day is essentially a non-official day. But still, I request that this Bill may please be taken up on the next Non-Official Day.

MR. SPEAKER : Well, that is a matter to be decided by ballot again.

(2) THE MADRAS AGRICULTURISTS RELIEF (AMENDMENT) BILL, 1960 (L.A. BILL NO. 29 OF 1960).

MR. SPEAKER : Hon. Member Sri K. R. Viswanathan who has given notice of this Bill has written to me to say that he does not want to move this Bill at the present moment. So, we may take up the next Bill.

(3) THE MADRAS ESTATES (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) AMENDMENT BILL, 1961.

SRI R. SRINIVASA IYER : Sir, I move—

" That leave be granted for the introduction of the Madras Estates (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1961."

MR. SPEAKER : The question is—

" That leave be granted for the introduction of the Madras Estates (Abolition and Convertion into Ryotwari) Amendment Bill, 1961."

The motion was put and carried and leave was granted.

SRI R. SRINIVASA IYER : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(4) THE MADRAS DISABLED PERSONS (REHABILITATION AND EMPLOYMENT) BILL, 1961.

SRI M. S. SELVARAJAN : Sir, I move—

" That leave be granted for the introduction of the Madras Disabled Persons (Rehabilitation and Employment) Bill, 1961."

MR. SPEAKER : The question is—

" That leave be granted for the introduction of the Madras Disabled Persons (Rehabilitation and Employment) Bill, 1961."

The motion was put and carried and leave was granted.

SRI M. S. SELVARAJAN : I introduce the Bill, Sir.

MR. SPEAKER : The Bill is introduced.